டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in




agridoctor.in | 17.6.2023 சனிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.10, Issue: 304 - Madurai | Online Edition

# நமது பூமியை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும்

## ஜி20 வேளாண் அமைச்சர்கள் கூட்டத்தில் பிரதமர் உரை

புது தில்லி, ஜூன் 16

பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலிச் செய்தி வழியாக ஜி20 வேளாண் அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றினார்.

கூட்டத்தில் பங்கேற்ற, அனைத்து முக்கிய பிரமுகர்களையும் இந்தியாவிற்கு வரவேற்பதாகக் கூறிய பிரதமர், மனித நாகரிகத்தின் இதயம் வேளாண்மை என்று குறிப்பிட்டார். ஒரு வேளாண்மை அமைச்சரின் பொறுப்புகள் பொருளாதாரத்தின் ஒரு துறையைக் கையாளுவது மட்டுமின்றி, மனித குலத்தின் எதிர்காலத்தை பாதுகாக்கும் பொறுப்பையும் கொண்டதாகும் என்று குறிப்பிட்டார். உலகளவில் 2.5 பில்லியனுக்கும் அதிக மான மக்களுக்கு வேளாண்மை வாழ்வாதாரத்தை வழங்கு வதாகவும், உலகளாவிய தெற்கில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 30 சதவிகிதத்தை அது அளிப்பதுடன், 60 சதவிகிதத்திற்கும் அதிகமான வேலைகளை வழங்கி வருவ தாகவும் பிரதமர் கூறினார். உலகளாவிய தெற்கு இன்று எதிர் கொள்ளும் சவால்களை விளக்கிய பிரதமர், பெருந்தொற்றின் தாக்கம் மற்றும் விநியோகச் சங்கிலியை சீர்குலைக்கும் மோச மான புவிசார் அரசியல் பதற்றம் ஆகியவை பெரும் சவால் களாக உருவெடுத்துள்ளன என்று தெரிவித்தார். அடிக்கடி தீவிர வானிலை உச்ச நிகழ்வுகளை ஏற்படுத்தும் பருவநிலை மாற்றத்தையும் அவர் குறிப்பிட்டார்.

வேளாண் துறையில் இந்தியாவின் பங்களிப்பை விளக்கிய பிரதமர், ‘அடிப்படைகளுக்குத் திரும்புதல்’, ‘எதிர்காலத்திற்கு முன்னேறுதல்’ ஆகியவற்றின் கலவையாக இந்தியாவின் கொள்கை உள்ளது என்று கூறினார்.

மேலும் இந்தியா இயற்கை வேளாண்மை மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த வேளாண்மையை ஊக்குவித்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். 'இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகள் தற்போது இயற்கை வேளாண்மையை மேற்கொண்டு வருகின் றனர்' என்று கூறினார். அவர்கள் செயற்கை உரங்கள் அல்லது பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதில்லை, அவர்கள் அன்னை பூமியைப் புதுப்பித்தல், மண்ணின் வளத்தைப் பாதுகாத்தல், ஒவ்வொரு துளியிலும், அதிக விளைச்சல் என்ற முறையில் கரிம உரங்கள் மற்றும் பூச்சி மேலாண்மை தீர்வுகளை ஊக்கு விப்பதில் கவனம் செலுத்துகின்றனர் என்று அவர் கூறினார். அதே நேரத்தில், நமது விவசாயிகள் உற்பத்தித்திறனை அதிகரிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தங்கள் பண்ணை களில் சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து பயன்படுத்து வதையும், பயிர்த் தேர்வை மேம்படுத்த மண்வள அட்டைகளைப் பயன்படுத்துவதையும், ஊட்டச்சத்து உரங்களை தெளிக்க ட்ரோன்களைப் பயன்படுத்துவதையும் அவர் உதாரணமாகக் காட்டினார். அவர்களின் பயிர்களைப் கண்காணிக்கவும், வேளாண்மையில் உள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் இந்த 'இணைவு அணுகுமுறை' சிறந்த வழி என்று தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக கொண்டாடப்படுவதைச் சுட்டிக்காட்டிய பிரதமர், சிறுதானியம் அல்லது ஸ்ரீ அன்னாவை அடிப்படையாகக் கொண்டு பல உணவுகள் தயாரிக்கப்படுவதால், உயரதிகாரிகள் ஹைதரா பாத்தில் தங்கள் தட்டுகளில் இதனை சுவைக்கலாம் என்று கூறினார். இந்த அருமையான உணவுகள் ஆரோக்கிய மானவை என்பதுடன், சிறுதானிய பயிருக்கு குறைந்த நீர் மற்றும் உரம் தேவைப்படுவதால் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் உதவுகிறது என்று தெரிவித்தார். சிறுதானியங்களின் வரலாற்றை எடுத்துரைத்த பிரதமர், அவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பயிரிடப்பட்டு வருவதாகவும், ஆனால் சந்தைகள் மற்றும் சந்தைப்படுத்தலின் தாக்கம் காரணமாக பாரம்பரியமாக விளையும் உணவுப் பயிர்கள் அவற்றின் மதிப்பை இழந்ததையும் சுட்டிக்காட்டினார். "நமது விருப்பத்திற்குரிய உணவாக ஸ்ரீ அன்னாவை ஏற்றுக் கொள் வோம்" என்று கூறிய பிரதமர், சிறுதானிய வேளாண்மையில் சிறந்த நடைமுறைகள், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பங்களைப்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

பகிர்ந்து கொள்வதற்கான, சிறந்த மையமாக, சிறுதானிய ஆராய்ச்சி நிறுவனத்தை இந்தியா உருவாக்கி வருகிறது என்று குறிப்பிட்டார்.

உலகளாவிய உணவுப் பாதுகாப்பை அடைவதற்கான கூட்டு நடவடிக்கையை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து வேளாண் அமைச்சர்கள் ஆலோசிக்க வேண்டும் என்று மோடி வலியுறுத்தினார். விளிம்பு நிலை விவசாயிகளை மையமாகக் கொண்டு, உலகளாவிய உர விநியோகச் சங்கிலிகளை வலுப் படுத்தும் நிலையான மற்றும் உள்ளடக்கிய உணவு முறையை உருவாக்குவதற்கான வழிகளைக் கண்டறியுமாறும் கேட்டுக் கொண்டார். அதே நேரத்தில், சிறந்த மண் வளம், பயிர் வளம், மகசூல் அதிகரிப்பு ஆகியவற்றிற்காக அந்த வேளாண் முறை களை பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டார். உலகின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாரம்பரிய நடைமுறை கள், வேளாண்மைக்குப் புத்துயிரூட்டுவதற்கான மாற்று வழி களை உருவாக்க நம்மை ஊக்குவிக்கும் என்று கூறினார். நவீன டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பது மற்றும் உலகளாவிய தெற்குப்பகுதியில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மலிவு விலையில் தீர்வுகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். வேளாண்மை மற்றும் உணவுக் கழிவுகளை குறைக்க வேண்டிய அவசரத் தேவையை அவர் வலியுறுத் தினார், அதேசமயம் கழிவுகளிலிருந்து செல்வத்தை உருவாக்கு வதில் முதலீடு செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

“வேளாண்மையில் இந்தியாவின் ஜி20 முன்னுரிமைகள் நமது ‘ஒரே பூமியை’ குணப்படுத்துதல், நமது ‘ஒரே குடும்பத்தில்’ நல்லிணக்கத்தை உருவாக்குதல் மற்றும் பிரகாசமான ‘ஒரே எதிர்காலத்திற்கான’ நம்பிக்கையை அளிப்பதில் கவனம் செலுத்துகின்றன” என்று தெரிவித்தார். ‘உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான டெக்கான் உயர்மட்டக் கோட்பாடுகள்’, சிறுதானியங்கள் மற்றும் பிற தானியங்களுக்கான ‘மகரிஷி’ முயற்சி ஆகிய இரண்டு உறுதியான முடிவுகளின் பணிகள் நடை பெற்று வருவதாக அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். ‘இந்த இரண்டு முயற்சிகளுக்கான ஆதரவு, உள்ளடக்கிய, நிலையான, மற்றும் நெகிழக்கூடிய விவசாயத்திற்கு ஆதரவான நடவடிக்கையாகும்” என்று கூறி பிரதமர் தமது உரையை நிறைவு செய்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# நான்கு நாட்களுக்கு கன மழைக்கான வாய்ப்பு

சென்னை, ஜுன் 16

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும் மேற்கு திசை காற்று மற்றும் வெப்ப சலனம் காரணமாக, இன்றும், நாளையும், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதி களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப் பள்ளி, நாமக்கல், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.



நாளை மறுநாள் 19ம் தேதியன்று தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவள்ளூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

20ம் தேதியில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொறுத்தமட்டில், அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 40-41 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 29-30 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக்கூடும்.

மீனவர்களைப் பொறுத்தமட்டில், தென்தமிழக வங்கக் கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகள், தெற்கு இலங்கை கடலோரப் பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

வரும் 20ம் தேதி வரையில், அரபிக்கடல் பகுதிகளான இலட்சத்தீவு பகுதிகள், கேரள பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# பவானி வட்டாரத்தில் வேளாண் கிராமிய கலை நிகழ்ச்சி



ஈரோடு, ஜூன் 16

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரத்தில் வேளாண்மை – உழவர் நலத் துறை சார்பாக வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் வேளாண் கிராமிய கலைநிகழ்ச்சி பருவாச்சி கிராமத்தில் 14.6.23 அன்று நடைபெற்றது. இதில் சத்தியராஜ், வேளாண்மை உதவி இயக்குநர், பவானி பேரூராட்சி தலைவர் யுவராண்




திருப்பதி, துணை தலைவர் சுப்ரமணி, முன்னாள் சேர்மேன் தட்சணாமூர்த்தி ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் வேளாண் தொடர்பான தேசிய சிறுதானிய ஆண்டு, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த திட்டம், வேளாண் அடுக்கு திட்டம், உழவன் செயலி, மண் பரிசோதனை, நுண்ணீர் பாசனத்திட்டம், அட்மா திட்டம் தொடர்பான அனைத்து திட்டங்களை நாடகம், நடனம் மற்றும் பாடல் மூலமாக எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பருவாச்சி சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் 50 கலந்து கொண்டனர். இதில் லோ.கங்கா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் பவானி நன்றியுரை கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை பவானி உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் நா.பூங்கோதை ஆகியோர் செய்திருந்தனர்.

EDII பெரியகுளம் தோட்டக்கலை
தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம்
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
பெரியகுளம், தேனி மாவட்டம்

NRT மண்டபம்,
NRT நகர்,
தேனி

நடத்தும்

23, 24, 25
ஜூன் 2023
காலை 11 மணி முதல்
இரவு 8 மணி வரை

# வீட்டுத்தோட்டச் செடிகள் கண்காட்சி மற்றும் விற்பனை மேளா




- பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு வீட்டுத் தோட்டம் குறித்த விழிப்புணர்வு
- வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான அனைத்தும் ஓரிடத்தில்
- மாடித்தோட்டத்தில் ஹைட்ரோபோனிக்ஸ், வீட்டிற்கு ஒரு தேனீபெட்டி போன்ற புதிய முன்னெடுப்புகள்

*வீட்டுக்கொரு தோட்டம் அமைப்போம் !*
*சற்றே செல்போனை மறந்து,*
*செடிகொடிகளுடன் பேசிச் சிரிப்போம் !!*

**தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்**
பெரியகுளம், இந்தியா - 625 604. 9361921828 / 6379140583
ceo@ediiphbif.org, ediitnaupkm@gmail.com, www.ediiphbif.org

# மட்கு உர தயாரிப்பு தொழில்நுட்பங்கள்

பயிர்களில் அதிக விளைச்சலை பெற தரமான விதையும், வளமையான மண்ணும் அவசியமாகிறது. மேலும் பண்ணையில் இருந்து பெறப்படும் கழிவுகளை கொண்டே மட்கு உரம் தயாரித்து மண்வளம் மேம்படுத்தும் தொழில்நுட்பத்தை பார்க்கலாம்.

**கழிவுகளை சிறு சிறு துண்டுகளாக்குதல்**

மட்குவித்தலின் போது கழிவுகளின் துகள்களின் அளவு முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனால் அக்கழிவுகளை மட்கு விப்பதற்கு முன்பு அவற்றை சிறு சிறு துகள்களாக்க வேண்டும். (2 முதல் 2.5 செ.மீ நீள,அகலம்).

**பச்சை நிறக் கழிவுகளையும் பழுப்பு நிறக் கழிவுகளையும் ஒன்றாக கலக்குதல்**

கரிமச்சத்து, தழைச்சத்து விகிதம் தான் மட்கும் காலம், வேகம் ஆகியவற்றை முடிவெடுக்கிறது. கரிமச்சத்து மற்றும் தழைச்சத்து விகிதத்தின் அளவு குறுகியதாக இருந்தால் மட்டுமே மக்கும் முறை விரைவாக நடைபெறும். கிளைரிசீடியா இலைகள், அகத்தி, தக்கைப்பூண்டு இலைகள் ஆகியவை பச்சைக் கழிவுகளாகும். வைக்கோல், காய்ந்த இலைகள், காய்ந்த புற்கள் ஆகியவை கரிமச்சத்து அதிக முள்ள பழுப்பு நிறக் கழிவு களாகும். இவ்விரண்டு கழிவுகளையும் சேர்த்து மட்க வைத்தால், அக்கழிவுகள் குறைந்த காலத்தில் மட்கிவிடும்.

**கம்போஸ்ட் குவியல் அமைத்தல்**

குறைந்தது, 4 அடி உயரத்திற்கு கழிவுகளை போட்டு அவற்றின் அளவை சமப்படுத்த வேண்டும். மக்கவைக்கும் இடம் சற்று உயர்வான இடத்திலும், நல்ல நிழலிலும் இருக்க வேண்டும்.

**மட்குதலுக்கு தேவையான உயிர் உள்ளீடுகள்**

1 டன் பயிர்க்கழிவுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நுண்ணுயிர் கூட்டுக்கலவை 2 கிலோ போதுமானது. (அ) 1 டன் பயிர்க்கழிவுக்கு 40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து, பயிர்க்கழிவின் மேல் தெளிக்க வேண்டும்.

## கம்போஸ்ட் படுக்கையில் காற்றோட்டம் ஏற்படுத்துதல்

திடக்கழிவுக் குவியலில் தேவையான அளவு உயிர்வாயு எனப்படும் ஆக்ஸிஜன் இருக்க வேண்டும். குவியலைப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை கிளறி விடுவதால் கீழுள்ள பொருட்களை மேலும், மேலேயுள்ள பொருட்கள் கீழும் மாறுகின்றன. இவ்வாறு கலக்குவதால் நுண்ணுயிரிகளின் செயல்பாடு தூண்டப்பட்டு மக்குதல் செயல் வேகமாக நடைபெறுகின்றது.

## ஈரப்பதம் நிலை நிறுத்துதல்

மக்கிய உரம் தயாரிக்கும் போது 70 சதவிகிதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும், மக்கிய உரத்தின் ஈரப்பதம் குறைய விடக்கூடாது. கழிவுகளில் ஈரப்பதம் குறைவாக இருந்தால், அவைகளில் உள்ள நுண்ணுயிரிகளானது இறந்துவிட நேரிடும். இதனால் மக்கிய உரம் தயாரித்தல் பாதிக்கப்படும்.

## மட்கிய உரம் முதிர்வடைதல்

முதிர்வடைந்த மட்கிய உரத்தின் வெளிப்படை தோற்றமானது, அளவு குறைந்தும், கருப்பு நிறமாகவும், மண்ணின் மணமும், ஒவ்வொரு துகளின் அளவு குறைந்தும் காணப்படும். மக்கிய உரம் முதிர்ச்சியடைந்த பின்னர், மட்கிய உரக்குவியலை கலைத்து தரையில் பரப்புதல் வேண்டும். அடுத்து ஒரு நாள் கழித்து, மட்கிய உரமானது சீரான அளவோடு இருக்க 4 மி.மீ. சல்லடை கொண்டு சலித்து எடுக்க வேண்டும்.

மட்கிய உரம் தயாரித்த பிறகு கிடைக்கும் மட்காத கழிவுகளை, மறுபடியும் உரம் தயாரிக்க பயன்படுத்தலாம். மேலும் அதிக விளைச்சலை பெற மண்வளம் மட்டுமே போதாது, தரமான விதையும் அவசியமாகிறது.

எனவே, தங்களிடம் உள்ள விதை தரமானதா என்பதை அறிய பரமக்குடி ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத்தில் விதைகளை கொடுத்து விதையின் தரத்தை அறிந்த பின் பயிரிடுவதால் அதனால் ஏற்படும் மகசூல் இழப்பை தவிர்க்கலாம் என்று விதை பரிசோதனை அலுவலர் ம.மகாலட்சுமி, வேளாண்மை அலுவலர்கள் முருகேஸ்வரி தெரிவித்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தினம் ஒரு மூலிகை

## வெள்ளை அருகு




வெள்ளை அருகு தாவரவியல் பெயர்:Enicostemma axillare வெள்ளை அருகு இம்–மூலிகை பெண்களுக்கு வெள்ளைபடுதல் மூலம் போன்ற வற்றிற்கு சிறந்த மருந்து இம்மூலிகையின் இலையை அரைத்து மோரில் இரண்டு சுண்டைக்காய் அளவு கலந்து சாப்பிட்டு வர மேற்கண்ட நோய்கள் தீரும் மேலும் இம்மூலிகையினால் குன்மம் வாதப்பினை வாத குடல் விருத்தி ஜில் பிடிப்பு நரம்புகளை பற்றிய கிரந்தி தினவு சிறு சிரங்கு இவைகள் குணமாகும் வித்தை முறிக்கும் உஷ்ணத்தை தணிக்கும் மேலும் இந்த இலையில் 10 எடுத்து நன்றாக மென்று சாரை மட்டும் விழுங்கிவிட்டு சக்கையை துப்பி விட வேண்டும் பிறகு இளநீர் சாப்பிட வேண்டும் இவ்வாறு செய்து வர மூலம் குடல் வாதம் குன்மம் அண்டவாதம் மூட்டுவாதம் குதிக்கால் வலி கழுத்து வலி அரிப்பு ஊழல் கிராணி கழிச்சல் பேதி அனைத்தும் கேட்கும் இம்முலிகையின் இலை ஏழு எடுத்து தண்ணீர் விட்டு அரைத்து பசும்பாலில் சாப்பிட்டு வர காலை மாலை நோய் தீரும் இம்மூலிகையில் சுண்ணாம்பு சத்து ஈயச்சத்து உப்புச்சத்து அதிகம் உள்ளது.

தகவல் : ASN சாமி, அங்கக ஒருங்கிணைந்த விவசாய பண்ணை மற்றும் மூலிகை பண்ணை, ஆதனூர். திருவண்ணாமலை மாவட்டம். 94423 11505.



# தூய காற்று எங்கே? காற்று மாசுபடுவதை தடுப்பது எப்படி?

மனித நாகரிகம் வளர வளர இயற்கை சீர்கேடு அடைந்து வருகிறது. உலகில் உயிர்கள் வாழ இன்றியமையாதது காற்று என்றாலும் சில நேரங்கள்ல இந்த காற்று தனியாக உருவெடுத்து தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது. இந்த காற்றின் அருமை பெருமைகளை உலகிற்கு உணர்த்திட விழிப்புணர்வு ஏற்படுத்த கடந்த 15 ந்தேதி உலக காற்று தினம் கொண்டாடியது நாம் அறிந்ததே. அப்படிப்பட்ட தூய காற்றை தேடி இன்று நாம் அலைகிறோம்.

மூச்சு விடுதல் தொடங்கி, குளுகுளு ஏசி வரை, எல்லா இடங்களில் நீக்க மற நிறைந்து இருந்தாலும்கூட அவற்றை மாசுபடுத்தாமல் இருப்பது நமது கடமை. மனிதன் உணவு இல்லாமல் கூட சில நாட்கள் வாழமுடியும், தண்ணிர் இல்லாமல் ஓரிரு நாட்கள் வாழமுடியும், காற்று இல்லாமல் ஒரு நிமிடம் கூட வாழ முடியாது. மனிதனுக்கு மட்டுமல்ல, ஏன் தாவரங்கள், விலங்குகளுக்கு காற்று மிகவும் அவசியமாகிறது.

**காற்று மாசு பட்டால் ஏற்படும் விளைவுகள்**

சாரசரி ஆணுடைய வாழ்நாள் 64 ஆண்டுகள். அதுபோல பெண்ணின் சாரசரி வயது 68 ஆண்டுகள். ஆனால் அதற்குள்ளாகவே சிலருக்கு ‘அகால மரணம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக இருப்பது காற்று மாசுபட்டால் ஏற்படும் சுவாச கோளாறுகள் சம்மந்தப்பட்ட நோய்களே. தொழிற் சாலையில் உண்டாகும் நச்சு புகையாலும், ஏகப்பட்ட வாகனங் களின் போக்குவரத்து புகையால் காற்று மாசுபாடு அடைகிறது. இதனுடைய காரணமாக மத்திய அரசு 1982ஆம் ஆண்டில் மத்திய மாசு கட்டுபாடு வாரியம் காற்று தர நிர்ணய வீதி ஒன்றை கொண்டு வந்தது. பின்னர் 1994 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் அந்த விதி திருத்தப்பட்டது. காற்று சுவாசிக்க கூடிய அளவுகளில் துகள்களில் 10 மைக்ரான்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். காற்றை ஆய்வு செய்ய நாட்டில் 342 மையங்கள் உள்ளன. அதிலும் சென்னை போன்ற பெரிய நகரங்களில் எட்டுக்கும் மேற்பட்ட மையங்கள் உள்ளன.

காற்றுக்கு உருவம், நிறம், மணம் கிடையாது. காற்றை உணரலாம். தவிர பார்க்க முடியாது. (அதாவது ***WHO HAS SEEN THE WIND*** என்ற ஆங்கில POEM தான் ஞாபகம் வருகிறது). பூமிக்கு வெப்ப நிலை ஒழுங்குபடுவத்துவதற்கு காற்று உதவுகிறது. காற்றில் இருந்து புதுப்பிக்க தக்க ஆற்றலை காற்றாலை மின்சாரம் தயாரிக்க பயன்படுகின்றன. கார்பன் வெளியேற்றத்தை குறைத்து சுற்றுச்சூழலை பாதுகாக்கிறது.

**காற்று மாசுபாட்டை குறைக்க என்ன வழிகள்**

கார்பன் டை ஆக்ஸைடு நீக்கி தூய காற்றாக மாற்றும் சக்தி மரங்களுக்கு தான் உண்டு. எனவே மரங்கள் தான் காற்றின்




தோழன். இன்று நாம் மரங்களை சாலை விரிவாக்கம், கட்டிடப் பணிகள் போன்ற காரணத்தால் அவற்றை வேரறுப்பதில் முன் நிற்கிறோம்.

மாறாக இழந்த ஒரு மரத்துக்கு இணையாக 10 மரங்கள் நடுவோம். தூய காற்றை சுவாசிப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

AGRIYA

# பயோ கம்போஸ்டர்

மக்க வைக்கும் நுண்ணுயிர் கலவை

INDOCERT
Input Approved in Organic Agriculture




உபயோகியுங்கள்

பயோ கம்போஸ்டர் பண்ணைக் கழிவுகளையும், நகர குப்பைக் கழிவுகளையும் முழுமையாக மக்க வைக்கும் நுண்ணுயிர் கலவையாகும்.

பயோ டெக்னாலஜி முறையில் தயாரிப்பதால் இது சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு தீங்கு விளைவிக்காது.

LINGA CHEMICALS

Customer Care: 0452 - 2321722

# அங்கக விவசாயத்தில் பங்கேற்பு உத்தரவாத திட்டத்தில் இணையதள மேலாண்மை பயிற்சி

திருச்சி, ஜூன் 16

இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகள் ஒரே கிராமத்தில் அல்லது அருகாமையில் உள்ள கிராமத்தை சேர்ந்த இயற்கை விவசாயிகள் ஒரு குழுவாக அமைத்து எவ்வித கட்டணமும் இல்லாமல் பங்கேற்பு உத்தரவாத திட்டத்தில் (PGS) அங்ககச்சான்று பெறலாம். இத்திட்டத்தின் கீழ் அங்ககச்சான்று பெற்ற பொருட்களை உள்நாட்டு அளவில் மட்டுமே விற்பனை செய்ய முடியும். குறைந்தபட்சம் 5 முதல் 100 விவசாயிகள் வரை இணைந்து குழுவாக அமைத்து அங்கக முறைப்படி விவசாயம் செய்யலாம்.

பங்கேற்பு உத்தரவாத திட்டத்தின் கீழ் விவசாயிகள் எளிதாக வாய்ப்புச் சான்றிதழை (Scope Certificate) பெறும் பொருட்டு அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, விழுப்புரம் மற்றும் கள்ளக் குறிச்சி ஆகிய மாவட்டங்களில் பணிபுரியும் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர்கள், விதைச்சான்று அலுவலர்கள் மற்றும் அங்ககச்சான்று ஆய்வாளர்கள் ஆகிய அலுவலர்களுக்கு பங்கேற்பு உத்தரவாத திட்டத்தின் கீழ் இணைய தளம் மூலமாக பதிவு மற்றும் உள்ளீடு குறித்த ஒரு நாள் பயிற்சி திருச்சி, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் 14.6.23 அன்று நடைப்பெற்றது. திருச்சி, விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநர், பா.நளினி வரவேற்புரை ஆற்றினார். இப்பயிற்சியில் திருச்சி, விதை ஆய்வு துணை இயக்குநர், ம.கோவிந்தராசு தலைமை உரை ஆற்றி, பயிற்சி யினை தொடங்கி வைத்தார். மேலும், நாகப்பட்டினம், விதைச் சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர், ஆர்.சுதா பங்கேற்பு உத்தரவாத திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள், இணைய தள மேலாண்மை குறித்தும் பயிற்சி அளித்தார். திருச்சிராப்பள்ளி, விதைச்சான்று அலுவலர் (தொழில்நுட்பம்) ந.வீரமணி நன்றியுரை ஆற்றினார். மேற்கூறிய ஒன்பது மாவட்டங்களில் உள்ள விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர்கள், விதைச்சான்று அலுவலர்கள், அங்ககச் சான்று ஆய்வாளர்கள் ஆகியோர் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பாரம்பரிய நெல் இரகங்களும் அதன் சிறப்புகளும்

ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாக நூற்றுக்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் ரகங்கள் அந்தந்த நிலத்தின் தன்மை, காலநிலைக்கு ஏற்றவாறுத மிழ்நாட்டில்ப யிரிடப்பட்டுள்ளது. அவை களர், உவர். வறட்சி தாங்கி நீர் தேங்கி இருக்கும் நிலையிலும் வளரக்கூடிய ஒரு பயிராகமட்டும் இல்லாமல் மருத்துவ மகத்துவத்தினையம், ஊட்டச்சத்தினையும், நறுமணமும் கொண்டிருந்தன. வளர்ந்து வரும் மக்கள் தொகை உணவுப் பஞ்சத்தையும் போக்க ஏற்பட்ட பசுமைப் புரட்சியின் காரணமாக பல பாரம்பரிய நெல் இரகங்கள் வழக்கொழிந்து போயின. இந்தியா முழுவதிலும் தூய மல்லி, சேலம் சம்பா, காட்டுயானம், கைவர சம்பா, குழியடிச்சான், குள்ளக்கார், பிசினி, குடவாழை, அன்னமழகி, காட்டுப்பொன்னி, வெள்ளைக்கார், மஞ்சப் பொன்னி, கருப்பு சீரக சம்பா, புழுதி சம்பா, கட்டி சம்பா, இராமகல்லி, காலாநமக், அனந்தனூர், சன்னம், மொழிக்கருப்பு சம்பா, மைசூர் மல்லி, வெள்ளை குருவிகார், குருவிகார், கந்தசாலா, காட்டு சம்பா, சின்னப் பொன்னி, தேங்காய் பூ சம்பா, இறவை பாண்டி, சீரக சம்பா, வரப்பு குடைஞ்சான், சன்ன சம்பா, கருங்குறுவை, அறுபதாம் குறுவை, கொசுவைக்குத்தாளை, இலுப்பை பூ சம்பா, பாசுமதி, காட்டுக்குத் தாளம், வெள்ளைப் பொன்னி, பனங்காட்டு குடவாழை, விஷ்ணு போகம், வாசனை சீரக சம்பா, மணல் வாரி இன்னும் பல இரகங்கள் இருந்துள்ளன.



தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்டு பயிரிடப்படும் பாரம்பரிய நெல் இரகங்களுக்கும் அவற்றின் மருத்துவ குணங்களும்

| நெல்வகை | பயன்கள் |
|---|---|
| **கருப்புகவுணி** | கருப்புகவுணி ஆஸ்த்துமா அபாயத்தை குறைக்கும்.<br>கல்லீரலை பாதுகாக்கும் கேடயமாக விளங்குகிறது.<br>இது நீரிழிவு நோயைத் தடுக்கும்<br>இது இரத்த அழுத்தத்தை முற்றிலும் குணமாக்குகிறது.<br>இது LDL எனப்படும் Low Density lipoprotein எனப்படும் கெட்ட கொழுப்பினை முற்றிலும் குறைக்கிறது.<br>இது புற்றுநோயைத் தடுக்கிறது.<br>செரிமானத்தை மேம்படுத்துகிறது.<br>முடி வளர்ச்சி, கண் பார்வையை அதிகரிக்கிறது. |
| **மாப்பிள்ளை சம்பா** | நரம்பு மண்டலம் வலுப்பெறும் |
| **பூங்கார் அரிசி** | சுகப்பிரசவம், தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கும்<br>இரும்பு, துத்தநாகம், தவிர இதில் மாங்கனீசு, பாஸ்பரஸ், மாலிப்டினம், மக்னீசியம் உள்ளது.<br>பெண்களின் ஹார்மோன் பிரச்சினைக்கு இது ஒரு அருமருந்து. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.<br>இரத்த ஹீமோகுளோபின் அளவினை அதிகரிக்கிறது.<br>பழைய சாதமாக உட்கொள்ளும் போது விட்டமின் பி காம்ப்ளக்ஸ் கிடைக்கிறது. |
| **கருத்தகார்** | மூலம், மலச்சிக்கல் குணப்படுத்தும் |
| **மூங்கில் அரிசி** | மூட்டுவலி, முழங்கால் வலிகுணமாகும் |
| **அறுபதாம் குறுவை** | எலும்பினை வலுப்பெறச் செய்யும் |
| **இலுப்பை பூ சம்பா அரிசி** | பக்கவாதம், கால்வலி குணமாகும் |

| | |
|---|---|
| **தங்கச் சம்பா** | பல் மற்றும் இதயம் வலுப்பெறும் |
| **கருங் குறுவை** | கொடிய நோய்களை குணப்படுத்தும். உடலுக்கு அதிக சக்தியளிக்கிறது. |
| **கருமன் சம்பா அரிசி** | ரத்தம், உடல் சுத்தப்படுத்தும் |
| **கார்** | தோல் நோய்களை போக்க உதவும் |
| **குடை வாழை** | குடலினை சுத்தம் செய்யும் |
| **கிச்சிலி சம்பா** | இரும்பு, சுண்ணாம்புச் சத்து அதிகம் |
| **நீலம் சம்பா அரிசி** | இரத்த சோகை போக்கும் |
| **சீரகசம்பா அரிசி** | அழகு தரும். |
| **தூயமல்லி** | உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். நரம்பு மண்டலத்தை பலப்படுத்துகிறது. நீரிழிவு நோயினைத் தடுக்கிறது. எளிதில் செரிமானமாகும் சரும அழகிற்கும், ஆரோக்கியத்திற்கும் நல்லது உள் உறுப்புகள் வயதடைவதை தடுக்கிறது உடல் மற்றும் மூளை சுறுசுறுப்பிற்கு உதவுகிறது. |



| | |
|---|---|
| **குழியடிச்சான்** | தாய்மார்களின் பால்சுரப்பினை அதிகரிக்கும் |
| **சேலம் சன்னா அரிசி** | தசை நரம்பு, எலும்பு வலுவாகும் |
| **பிசினி அரிசி** | இடுப்பு வலி, பெண்களின் மாதவிடாய் வலியினை நீக்கும் |
| **சூரக்குறுவை** | உடல் மெலிவதற்கும் அழகிற்கும் ஏற்றது. |
| **வாலான் சம்பா அரிசி** | பெண்களின் இடுப்பு வலியினை நீக்கு வதற்கும், சுகப்பிரசவத்திற்கும் ஏற்றது. |
| **வாடான் சம்பா** | உறக்கம் மற்றும் அமைதியினைத் தரும். |

இத்துணை மகத்துவம் கொண்ட பாரம்பரிய ரகங்களை, நம் முன்னோர்களின் வழியான இயற்கை/அங்கக விவசாயம் மூலம் மீட்டெடுப்போம். ஆரோக்கிய வாழ்வினை நாம் பெறுவது மட்டுமல்லாது, நமது வருங்கால சந்ததியினருக்கும் எடுத்துச் செல்வோம். எனவே, பாரம்பரிய நெல் ரகங்களை மாதிரி ஒன்றுக்கு ஆய்வுக் கட்டணமாக ரூ.80/- மட்டும் செலுத்தி ஆய்வு செய்து விதைப்பிற்கும், விதையினை சேமிக்கும் பட்சத்தில் விதையின் ஈரப்பதம் அறிந்தும் பயனடையுமாறு கரூர் திண்ணப்பா நகர் முதல் தெரு, காந்தி கிராமம், கரூரில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் சி.பத்மா கேட்டுக் கொள்கிறார்.

## சேலம் பூ மார்க்கெட் விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் வாங்கும் விலை நிலவரம் (விலை கிலோ 1க்கு)

| | | | |
|---|---|---|---|
| மல்லி | 360 | மஞ்சள் அரளி | 180 |
| முல்லை | 240 | செவ்வரளி | 180 |
| ஜாதி மல்லி | 400 | ஐ.செவ்வரளி | 150 |
| காக்கட்டான் | 200 | நந்தியாவட்டம் | 30 |
| கலர் காக்கட்டான் | 120 | சி.நந்தியாவட்டம் | 50 |
| மலைக்காக்கட்டான் | 200 | சம்மங்கி | 60 |
| அரளி | 140 | சாதா சம்பங்கி | 60 |
| வெள்ளை அரளி | 180 | | |

# சேலம் மாவட்டம், ஆத்தூர் உழவர் சந்தை 16-6-23 காய்கறிகள் விலை விபரம்

(ரூ/கிலோ)

| | |
|---|---|
| 1. தக்காளி | ரூ.34-38 |
| 2. உருளை | ரூ.28-30 |
| 3. சின்ன வெங்காயம் | ரூ.52-60 |
| 4. பெரிய வெங்காயம் | ரூ.20-25 |
| 5. பச்சை மிளகாய் | ரூ.65-70 |
| 6. கத்தரி | ரூ.48-50 |
| 7. வெண்டைக்காய் | ரூ.26-30 |
| 8. முருங்கை காய் | ரூ.40-50 |
| 9. பீர்க்கங்காய் | ரூ.40-45 |
| 10. சுரக்காய் | ரூ.15-20 |
| 11. புடலங்காய் | ரூ.22-25 |




| | |
|---|---|
| 12. பாகற்காய் | ரூ.46-50 |
| 13. தேங்காய் | ரூ.25-30 |
| 14. முள்ளங்கி | ரூ.32-35 |
| 15. பீன்ஸ் | ரூ.70-75 |
| 16. அவரை | ரூ.75-80 |
| 17. ஊட்டி கேரட் | ரூ.84 |
| 18. வெற்றிலை | இல்லை |
| 19. மாங்காய் | ரூ.15-20 |
| 20. வாழைப்பழம் | ரூ.30-40 |
| 21. கீரைகள் | ரூ.22 - 25 |
| 22. பப்பாளி | ரூ.15-20 |
| 23. கொய்யா | ரூ.35-40 |
| 24. மாம்பழம் | ரூ.35-40 |
| 25. ஆப்பிள் | இல்லை |
| 26. சாத்துக்குடி | இல்லை |

தகவல் : நிர்வாக அலுவலர், உழவர் சந்தை, ஆத்தூர், சேலம் மாவட்டம்.

# மண்வளம் மேம்பாட்டிற்கு பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, ஜூன் 16

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்து மண்வளத்தை மேம்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என வேளாண்மை இணை இயக்குநர் மா.பெரியசாமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. இம்மழையினை பயன்படுத்தி விவசாயிகள் பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பு, தக்கைப் பூண்டு போன்ற பயிர்களை சாகுபடி செய்து மண்வளத்தை மேம்படுத்தலாம். பசுந்தாள் உரப்பயிர்கள், வேர் முடிச்சுகளிலுள்ள பாக்டீரியாக்களின் உதவியினால் ஆகாயத்திலுள்ள தழைச்சத்தை நிலை நிறுத்துகிறது. இதனால் மண்ணில் தழைச்சத்து அதிகரித்து, மண்வளம் மேம்படுகிறது.

நிலத்திலுள்ள அங்ககப் பொருட்களின் அளவையும் அதிகரிக்கிறது. மண்ணில் நன்மை செய்யும் நுண்ணீர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் மண் வளம் மேம்படுகிறது. இதனால் மண்ணில் நீர் பிடிப்பு திறன் அதிகமாகிறது.



பசுந்தாள் உரப்பயிர்களை வளர்ப்பதன் மூலம் களைகள் கட்டுப் படுத்தப்படுகிறது. தக்கைப் பூண்டு மற்றும் சணப்பு விதைகள் ஒரு ஏக்கருக்கு 20 கிலோ வீதம் விதைப்பு செய்ய வேண்டும். 40-45 நாட்களில் பூப்பூக்கும் பருவத்தில் மடக்கி உழவு செய்ய வேண்டும். இவ்வாறு உழவு செய்வதால் ஏக்கருக்கு 25 முதல் 30 கிலோ தழைச்சத்து மண்ணில் நிலை நிறுத்தப்படுகிறது.

**தக்கைப் பூண்டு**

அனைத்து வகை நிலத்திலும் பயிரிடலாம். வடிகால் வசதியற்ற நிலங்களிலும், வறண்ட-நிலங்களிலும் களர் நிலங்களிலும் நன்கு வளரும். ஒரு ஏக்கருக்கு 20 கிலோ விதை போதுமானது. இது 40-45 நாள்களில் பூக்க ஆரம்பிக்கும் பொழுது மடக்கி உழவு செய்ய வேண்டும்.

**சணப்பு**

இது வடிகால் வசதியுள்ள நிலங்களில் நன்கு வளரும். விதைத்த ஏழு வாரங்களில் சணப்புப் பயிரை நிலத்தில் மடக்கி உழலாம். வடிகால் வசதியுடன் கூடிய குறுமண் நிலங்களில் பயிர் செய்வது ஏற்றது.

**கொளுஞ்சி**

மணற்சாரியான ஒருபோக நஞ்சைகளில் பயிர் செய்வதற்கு ஏற்றது. கடும் வறட்சியைத் தாங்கி வளரக் கூடியது. இது மெதுவாக வளர்ந்து நிலத்தில் 6 முதல் 8 மாதம் வரை இருக்கும். கடும் வறட்சியையும் தாங்கக் கூடியது. மாடுகள் மேயாது. ஆகவே வேலியற்ற நிலங்களிலும் பயிர் செய்யலாம்.

ஏக்கருக்கு 10 முதல் 15 கிலோ வரை விதை விதைக்க வேண்டும். இதன் விதைகளை மணலுடன் கலந்து இலேசாகக் குத்தி விதைக்க வேண்டும்.

ஒரு நிலத்தில் 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு தொடர்ந்தாற்போல், இதை விதைத்து பயிர் செய்வதனால், பின்னர் அந்நிலத்தில் தரையில் விழுந்து கிடக்கும் விதைகள் முளைத்து வருடாவருடம் பயிராகும். ஆடி, ஆவணி மாதங்களில் கொளுஞ்சிச் செடிகளை சேகரித்து நெல் வயல்களுக்கு உரமாக உபயோகிக்கலாம்.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சம்பா நெற்பயிரில் கூடுதல் மகசூல் பெற மண் வளத்தினை மேம்படுத்தும் நோக்கத்தில் பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்து மடக்கி உழவு செய்து பயன்பெறுமாறு வேளாண்மை இணை இயக்குநர் மா.பெரியசாமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# குறுவை நெல் விதையின் தரத்தை அறிய விதைப் பரிசோதனை அவசியம்

நாகப்பட்டினம், ஜூன் 16

நாகை மாவட்ட விவசாயிகள் விதைச்சான்று அலுவலர்களால் பரிசோதிக்கப்பட்ட தரமான விதைகளை விதைத்து அதிக மகசூல் பெறலாம் என்று நாகை விதைப்பரிசோதனை நிலைய மாவட்ட மூத்த வேளாண்மை அலுவலர் முனைவர் வெ.விஜயகுமார் மற்றும் நிலைய வேளாண்மை அலுவலர் செ.பிரசன்னா விவசாயிகளை கேட்டுக் கொண்டனர்.




இது குறித்து அவர்கள் தெரிவித்தததாவது, தரமான விதையா என்பதை பரிசோதித்து விதைப்பது அவசியம். விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளின் ஆரோக்கியத்தையும், தரத்தையும் உறுதிப்படுத்தி விதைப்பது விவசாயத்தில் வெற்றிக்கு மையமாக இருக்கும். நல்ல மரபுகளுடன் புறத்தூய்மை, நல்ல முளைப்புத் திறன், குறிப்பிட்ட அளவு ஈரப்பதம் மற்றும் பூச்சி நோய் தாக்காத விதைகளே நல்விதைகளாகும். இது விதைப் பரிசோதனை நிலையங்கள் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

நாகை மாவட்டத்தில் இயங்கிவரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் மூன்று விதமான விதை மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. முதலாவதாக சான்றளிப்புத் துறை மூலமாக வயல் தரத்தில் தேர்வு செய்து அறுவடை செய்யப் பட்ட பின்பு விதை சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்தம் செய்யப்பட்டு விதைச்சான்று அலுவலர்களால் விதை மாதிரி சேகரித்து விதை களின் தரமான புறத்தூய்மை, முளைப்புத்திறன் நிர்ணயிக்கும் காரணியான ஈரப்பதம் மற்றும் பிற ரகம் கலந்திருக்கிறதா என்ற முக்கிய

காரணிகள் விதைப்பரிசோதனை நிலையத்தில் ஆய்வுக்கு உட்படுத் தப்பட்டு அதன் முடிவு அறிக்கை உடனுக்குடன் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படும்.

**இரண்டாவதாக ஆய்வாளர் விதைகள்** : தரக்கட்டுப்பாட்டில் பணிபுரியும் விதை ஆய்வாளர்கள் சான்று அட்டைக்கட்டப்பட்டு விற்பனைக்கு தயாராக இருப்பில் இருக்கும் விதைகளின் மாதிரிகள் பெறப்பட்டு புறத்தூய்மை மற்றும் முளைப்புத்திறன் பாதிப்பு இருக் கிறதா என்பதை விதைப்பரிசோதனை நிலை யத்தில் பரிசோதனை செய்து முறிவறிக்கைகள் இணையத் தளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு விதை ஆய்வாளர் மற்றும் விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்படும்.

மூன்றாவதாக விவசாயிகள், விதை விற்பனையாளர்கள், தனி யார் விதை உற்பத்தியாளர்கள் தங்களிடம் இருப்பில் இருக்கும் விதைகளில் நிர்ணயிக்கப்பட்ட சதவிகிதத்தில் முளைப்புத்திறன் இருக்கிறதா என்பதை தெரிந்து கொள்ள நேரடியாகக் கொடுக்கும் பணிவிதை மாதிரிகளும் ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்டு முடிவுகள் விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

குறுவை நெல் ரகங்களுக்கு விரைந்து விதைப்பரிசோதனை முடிவுகள் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் முன்னுரிமை அடிப்படையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, விதைப்பெற பட்ட 5ம் நாள் முதல் 14ம் நாட்களுக்குள் விதைப்பரிசோதனை முடிவு அறிக்கை விவசாயிகளின் இருப்பிட முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும். விதைப்பரிசோதனை முடிவுகளை விவசாயிகள் பெற்று முளைப்புத்திறனில் தேறிய (முளைப்புத்திறன் 8 சதம் மற்றும் அதற்கு மேல் அதிகமாக உள்ள விதைகள்) விதைகளை மட்டும் விதைப்பிற்கு பயன்படுத்தலாம்.

எனவே விவசாயிகள், தனியார் விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் அனைவரும் தங்களிடம் இருப்பில் உள்ள வேளாண் துறையால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நெல் ரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை (யூ) 45, ஆடுதுறை 53, அம்பை 16, கோ 51 போன்ற குறுகிய கால ரகங்களை விதைப்ப தற்கு முன்பு முளைப்புத்திறன் அறிந்து விதைக்க ஒரு விதை மாதிரிக்கு 150 கிராம் மாதிரிகள் எடுத்து ஒரு மாதிரிக்கு கட்டணமாக ரூ.80 செலுத்தி பெயர், முகவரி, பயிர் விபரங்களுடன் நாகப் பட்டினம், வெளிப்பாளையம், 15,காளியம்மன் கோவில் தெருவில் செயல்படும் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைத்து அல்லது நேரில் கொடுத்து முளைப்புத்திறன் அறிந்து விதைத்து அதிக மகசூல் பெறலாம். விபரங்களுக்கு தொலைபேசி 04365 247555 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# எலச்சிபாளையம் வட்டார விவசாயிகள் கறவை மாடு, ஆடுகளுக்கு மானியம் பெறலாம்

நாமக்கல், ஜூன் 16

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செ.ஜெயமணி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தொண்டிப்பட்டி மற்றும் புத்தூர் கிழக்கு ஆகிய கிராமங்களில் மானாவாரி பகுதிகளில் தகுதியுள்ள விவசாயிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஒருங் கிணைந்த பண்ணைய முறை மூலம் பயிர்கள் மற்றும் தீவன பயிர்கள் பயிரிடுவதுடன் கறவை மாடு, ஆடு அல்லது செம்மறி ஆடு மற்றும் கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மண் புழு உரம் உற்பத்தி மற்றும் பழச்செடிகள் ஆகியவை 50 சதவீத மானியம் வழங்கப் படும். ஒவ்வொரு அலகுக்கும் ரூ.30,000ம் மானியம் வழங்கப் படும். பொது விவசாயிகளுக்கு 1 எக்டேர் நிலம் இருக்க வேண்டும். ஆதி திராவிட விவசாயிகளுக்கு 1 ஏக்கர் நிலம் தேவை. எனவே விருப்பமுள்ள விவசாயிகள் உழவன் செயலியில் பதிவு செய்தும் அல்லது தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர் களையோ எலச்சிபாளையம் வேளாண் உதவி இயக்குநர் அலுவல கத்தையோ தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என அதில் அவர் தெரிவித்துள்ளார்.




# அட்மா திட்டத்தில் கம்பம்பள்ளி கிராமத்தில் தென்னையில் வயல் விழா

கிருஷ்ணகிரி, ஜூன் 16

கிருஷ்ணகிரி வட்டாரம் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கம்பம்பள்ளி கிராமத்தில் தென்னையில் வயல் விழா மு.சீனிவாசன், வேளாண்மை துணை இயக்குநர், உழவர் பயிற்சி நிலையம் கிருஷ்ணகிரி, தலைமை வகித்து உழவன் செயலி குறித்தும், அலைப்பேசியில் பதிவிறக்கம் செய்தல் மற்றும் அவற்றின் பயன்களை விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

இவ்விழாவில் சிறப்பு உரை ஆற்றிய வேளாண்மை துணை இயக்குநர், சு.டேவிட் டென்னிசன், (மா/தி) கிருஷ்ணகிரி வேளாண் மைத் துறையின் திட்ட செயல்பாடுகள் குறித்தும் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் (KAVIADP) இடுபொருட்கள் மானிய விலையில் பெறுதல் பற்றி விவசாயி களுக்கு எடுத்துரைத்தார். வெ.சுரேஷ்குமார், வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணகிரி, கம்பம்பள்ளி விவசாயிகளுடன் உரையாடி தங்களுக்கு ஏற்படும் தொழில்நுட்ப சந்தேகங்களுக்கு வேளாண்ம துறையை அணுகி பயன்பெற வேண்டும் என்றார். ICAR-KVK ஏழுமிச்சங்கிரி ளு.உதயன், தொழில்நுட்ப வல்லுநர் (Agronomy) இயற்கை முறையில் காய்கறி பயிர்கள் ஊட்டச்சத்து அதிகம் உள்ள சிறுதானிய பயிர்கள் அவற்றின் பயன்கள், உயிர் உரங்களின் பயன் பாடுகள், மண்புழு உரம் தாயரிக்கும் முறைகள் அவற்றின் முக்கியத் துவம் குறித்தும், காய்கறி பயிரிகளில் பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் பூச்சி நோய் தாக்குதலை கட்டுபடுத்தும் முறைகள் பற்றி விளக்கினார். பன்னீர்செல்வம், வேளாண்மை அலுவலர், உழவர் பயிற்சி நிலையம் கிருஷ்ணகிரி மாநில அரசு திட்டங்கள், மானி யங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத் தார். இந்நிகழ்ச்சி யில் ப.பிரியா, கிருஷ்ணகிரி வட்டார வேளாண் அலுவலர், தென்னையில் பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். நடமாடும் மண் பரிசோதனை நிலைய பேருந்து கம்பம் பள்ளி கிராமத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் வேளாண்மை அலுவலர் சாத்திகா, மண் பரிசோதனை நீர் பரிசோதனை குறித்த முக்கியதுவத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண் அலுவலர் வி.விஜயன், கிரைன்ஸ் பற்றியும் இணைய தளத்தில் பதிவு செய்தல் அவற்றின் பயன்களை விளக்கினார். 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். விழாவிற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சண்முகம், பார்வதி ஆகியோர் செய்திருந்தினர்.

# சிறுதானிய பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் மதிப்புக்கூட்டுதல் மாநில அளவிலான பயிற்சி

மதுரை, ஜுன் 16




மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் சிறுதானிய பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டுதல் பயிற்சிக்கு கள்ளிக்குடி, மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், செல்லம்பட்டி ஆகிய 5 வட்டாரங்களிலிருந்து 40 விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர்.

இப்பயிற்சியினை கள்ளிக்குடி வட்டார ஒருங்கிணைப்பாளர் (பொ), தலைமையேற்று விவசாயிகளை வழியனுப்பி வைத்தார்கள். மூன்று நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் மக்காச்சோள ஆராய்ச்சி மையம் வாகைரயில் சிறுதானியங்கள் சாகுபடி பற்றியும் மற்றும் சிறுதானிய பயிர்களில் புதிய இரஙகங்கள் குறித்தும் பேராசிரியர்கள் விளக்கினார்கள். கோ10 என்கிற கம்பு ரகம் செயல்சவிளக்க திடலில் அந்த ரகத்தினை எவ்வாறு சாகுபடி செய்வது குறித்து விவசாயிகளுக்கு நேரடியாக வயலில் விளக்க மளிக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கோய-ம்புத்தூரில் சிறுதானிய பயிர்கள் துறையில் பேராசிரியர்கள் விவசாயிகளுக்கு சிறுதானிய பயிர்களான சாமை, பனிவரகு, குதிரைவாலி, திணை போன்ற பயிர்களின் சாகுபடி தொழில் நுட்பங்கள் விளக்கப்பட்டு அந்த பயிர்களின் விதைப்பண்ணை திடல் விவசாயிகளின் பார்வை நேரடியாக சென்று காண்ப்பிக்கப்பட்டது. சிறுதானிய பயிர்களினை தாக்கக்கூடிய நோய்களை பற்றி பயிர் நோயியல் துறை பேராசிரியர்கள் விவசாயிகளிடம் அதன் தாக்குதலின் அறிகுறிகளையும், கட்டுப்படுத்தும் முறைகளையும், காணொளி காட்சி மூலம் தெளிவாக விவசாயிகளிடம் விளக்கினார்கள். அறுவடை பின் தொழில்நுட்பத்திற்கான மையத்தில் சிறுதானிய பயிர்களில் மதிப்புக்கூட்டி விற்பனை செய்யப்படும் பொருட்களை எவ்வாறு தயாரிப்பது குறித்தும், தயார் செய்யப்பட்ட மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் விவசாயிகளின் பார்வைக்கு செயல் விளக்கமாக காண்பிக்கப்பட்டது. தயார் செய்யும் இயந்திரங்களும் காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட பணியாளர்களான இந்திராதேவி மற்றும் யுவராஜ்குமரன் ஆகியோர் செய்திருந்தார்கள்.

# பங்களிப்பு உத்தரவாத திட்டத்தின் (PGS) கீழ் இலவசமாக அங்ககச்சான்று பெற விவசாயிகள் விண்ணப்பிக்க அரிய வாய்ப்பு

விழுப்புரம், ஜுன் 16

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் கட்டணம் இல்லாமல் அங்ககச்சான்று பெற விண்ணப்பிக்கலாம் என விழுப்புரம் மாவட்ட விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் முனைவர் க.பாலசுப்ரமணியன் தெரிவித்து உள்ளார்.

இயற்கை விவசாயம் செய்யும் ஒரு கிராமம் அல்லது அருகாமையில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் தாங்களாகவே 5 முதல் 100 பேர் குழுவாக இணைந்து அங்கக முறைப்படி விவசாயம் செய்வோம் என உறுதிமொழி ஏற்று இத்திட்டத்தில் பங்கேற்கலாம். இக்குழுவிற்கு தனியாக பெயர் வைத்து அதில் தலைவர் மற்றும் செயலாளரை தேர்வு செய்து உறுப்பினர்களின் பெயர், கிராமம், பட்டா, ஆதார் எண், போட்டோ மற்றும் நில விவரங்களுடன் பங்கேற்பாளர் உறுதியளிப்பு திட்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்து விழுப்புரத்தில் உள்ள விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநருக்கு விண்ணப்பிக்க வேண்டும். தனிப்பட்ட விவசாயிகள் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க இயலாது. குழுவாக மட்டுமே பதிவு செய்து அங்ககச்சான்று பெறலாம். குழுவில் உள்ள விவசாயிகளே மற்ற குழு உறுப்பினர்களின் வயல்களை அங்கக முறையில் பயிர் செய்வதை உறுதி செய்ய வேண்டும். கட்டணம் இன்றி பங்கேற்பாளர் உறுதியளிப்பு திட்டத்தில் சேரும் விவசாய குழுவிற்கு முதல் 2 ஆண்டுகள் அங்கக விவசாயத்திற்கு மாறிக் கொண்டு இருக்கும் குழு என்றும் மூன்றாம் ஆண்டிலிருந்து 100 சதவீதம் அங்கக வேளாண்மை குழு என்றும் வாய்ப்புச் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் அங்ககச் சான்று முறையில் பயிரிட விரும்பும் விவசாயிகள் பதிவு செய்வதற்கு விழுப்புரம் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அல்லது அங்ககச் சான்று ஆய்வாளர் லாவண்யா (63825 01750) தொடர்பு கொண்டு பயன் அடையுமாறு கேட்டு கொண்டார்.